புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2049 | ஏப்ரல் 05, 2018 | புரட்சி 17 | முழக்கம் 12 | விலை: ரூ.3.00

# நடுவண் ஆட்சி, தமிழகத்துக்கு துரோகம்!

***காவிரிப் பிரச்சினையில் நடுவண் ஆட்சி பச்சையாக – தனது தேர்தல் அரசியல் நலனுக்காக தமிழ்நாட்டு மக்களின் உரிமைகளை திட்டமிட்டு பறித்துவிட்டது.***

- *16.2.2018 அன்று உச்சநீதிமன்றம் அளித்த இறுதித் தீர்ப்பில், “6 வாரங்களுக்குள் காவிரி மேலாண்மை வாரியத்தை மத்திய அரசு அமைக்க வேண்டும் - இந்த 6 வார காலக்கெடு எக்காரணம் கொண்டும் நீட்டிக்கப்பட மாட்டாது” என்று திட்டவட்டமாகக் கூறியிருந்தது. (*It is hereby made clear that no extension shall be granted for framing the scheme on any ground *- தீர்ப்பு பக்.451)*

- *6 வார காலத்துக்குள் தீர்ப்பை அமுல்படுத்த முடியாது என்று தமிழகம் வந்த மத்திய அமைச்சர்கள் பேட்டி அளித்தனர். தீர்ப்பை செயல்படுத்த வேண்டிய மத்திய நீர்வளத் துறை செயலாளரும் இதே போன்ற கருத்துகளையே வெளியிட்டார்.*

- *6 வாரக் கெடு முடியும் வரை மத்திய அரசு தீர்ப்பை அமுல்படுத்த எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.*

- *தமிழ்நாட்டில் பா.ஜ.க. தலைவர்களும் ஊடகங்களில் விவாதத்தில் பேசிய பா.ஜ.க. ‘பிரச்சாரகர்களும்’ கெடு முடிவதற்குள் நிச்சயம் காவிரி மேலாண்மை வாரியத்தை அமைப்போம் என்று நீட்டி முழங்கினர்.*

- *உச்சநீதிமன்றம் தனது இறுதித் தீர்ப்பில் காவிரி மேலாண்மை வாரியம் என்று குறிப்பிடவில்லை. ‘ஸ்கீம்’ என்றே குறிப்பிட்டிருக்கிறது என்று கருநாடக அரசு எடுத்துக் கொடுத்த ‘விதண்டாவாதத்தை’ நடுவண் ஆட்சியும் அப்படியே பற்றிக் கொண்டது. கருநாடகத் தேர்தலில் தங்கள் கட்சி வெற்றி பெற வேண்டும் என்றால் இந்தப் பிரச்சினை கிடப்பில் போட்டாக வேண்டும் என்பதே நடுவண் ஆட்சியின் நோக்கம்.*

- *‘ஸ்கீம்’ (செயல் முறை) என்று உச்சநீதிமன்றம் தனது இறுதித் தீர்ப்பில் குறிப்பிட்டிருக்கும் வார்த்தை காவிரி மேலாண்மை வாரியம் அமைப்பதையும் உள்ளடக்கியதுதான் என்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா நடுவண் அரசு மீதான தமிழ்நாடு அரசு அவமதிப்பு வழக்கிற்கான மனுத்தாக்கலின்போது வாய்மொழியாகக் கருத்து தெரிவித்திருக்கிறார்.*

- *மாநிலங்களுக்கிடையிலான நதிநீரைப் பகிர்ந்து கொள்வது குறித்து 1956ஆம் ஆண்டு ஒரு சட்டம் நடுவண் அரசால் உருவாக்கப்பட்டது. இந்தச் சட்டத்தில் சர்க்காரியா ஆணையம் அளித்த பரிந்துரையின் அடிப்படையில் திருத்தம் செய்யப்பட்டு 6ஏ(2) என்ற பிரிவு சேர்க்கப்பட்டது. இந்தப் பிரிவு ‘ஸ்கீம்’ என்ற சொல், ‘ஆணையம்’ (*authority*) என்பதையே குறிக்கும் என்று தெளிவாக விளக்கமளிக்கிறது. (சர்க்காரியா ஆணையம் என்பது இந்திரா பிரதமராக இருந்தபோது மத்திய மாநில உறவுகள், அதிகாரப் பகிர்வுகள் குறித்து ஆராய அமைக்கப்பட்ட ஆணையம்)*

- காவிரிப் பிரச்சினைக்காக அமைக்கப்பட்ட காவிரி நடுவர் மன்றம் தனது இறுதித் தீர்ப்பில் என்ன கூறியது? காவிரி நீர்ப் பங்கீட்டை செயல்படுத்தக் கூடிய அதிகாரங்களைக் கொண்ட ஆணையம் - அதாவது மாநிலங்களின் செயல்பாடுகளில் மேலாண்மை செலுத்தக் கூடிய வாரியம் ஒன்றை அமைக்க வேண்டும் என்றும் கூறியதோடு, அது ‘பக்ரா-பியாஸ்’ நதி நீர் **மேலாண்மை வாரியம்** போல் இருக்க வேண்டும் என்றும் தெளிவாக விளக்கியிருக்கிறது.

- உச்சநீதிமன்றமும் தனது இறுதித் தீர்ப்பில் மேற்குறிப்பிட்ட காவிரி நடுவர் மன்றம் (Tribunal) குறிப்பிட்ட மேலாண்மை வாரியம் பற்றியும், அது எப்படி, எவரைக் கொண்டு அமைக்கப்பட வேண்டும் என்பவை குறித்தும் கூட்டங்கள் நடத்தும் முறைகள் குறித்தும் உச்சநீதிமன்றம் விளக்கியிருக்கிறது. (தீர்ப்பு பக்கம் 337 - பத்தி 290) 2016ஆம் ஆண்டு இதே உச்சநீதிமன்றம், ‘காவிரி மேலாண்மை வாரியம்’ அமைக்க வேண்டும் என்று தீர்ப்பளித்த போது பா.ஜ.க. நடுவண் அரசு அதை எதிர்த்தது. அப்படி உத்தரவிட உச்சநீதிமன்றத்துக்கு உரிமை கிடையாது என்று பா.ஜ.க. ஆட்சி பதிலளித்தது.

- கருநாடகத் தேர்தலுக்கான அறிவிப்பு வெளி வந்துள்ள நிலையில், காவிரிப் பிரச்சினையில் நடுவண் ஆட்சி முடிவெடுக்க எந்தத் தடையும் இல்லை என்று தேர்தல் ஆணையரே கூறியிருக்கிறார். ஆனால் தேர்தல் நேரத்தில் காவிரி மேலாண்மை வாரியத்தை அமைத்தால் கருநாடகத்தில் ‘சட்டம் ஒழுங்கு சீர்கெடும்’ என்று நடுவண் ஆட்சி உச்சநீதிமன்றத்தில் மனு போடுகிறது.

- காவிரி மேலாண்மை வாரியம் அமைப்பதை கருநாடக அரசு எதிர்ப்பது உச்சநீதிமன்றத் தீர்ப்பை மறுக்கும் செயல்பாடு; இதை தேச விரோத நடவடிக்கை; தேச விரோதி என்று கூற பா.ஜ.க. தயாராக இல்லை. ஆனால் தமிழர்கள் இந்தியை எதிர்த்தால் தேசவிரோதி; ‘நீட்’டை எதிர்த்தால் ‘தேச’ விரோதி; ‘ஜி.எஸ்.டி.’யை எதிர்த்தால் ‘தேச விரோதி’, தமிழக உரிமைக்காக மெரினாவில் திரண்டவர்கள் ‘தேச விரோதி’ என்று தமிழக பா.ஜ.க. தலைவர்கள் தமிழர்களை குற்றக் கூண்டில் நிறுத்துகிறார்கள்.

- இந்தியா என்ற அமைப்புக்குள் கூர்மை அடைந்து வரும் தேசிய இனங்களுக்கான பிரச்சினைகளை ஒரு போதும் தீர்க்க முடியாது என்பதும், முழுமையான தன்னாட்சி உரிமை கொண்ட கூட்டமைப்பு முறையை பரிசீலித்தாக வேண்டும் என்பதையும் காவிரிப் பிரச்சினை தீவிரமாக உணர்த்தி நிற்கிறது.

# சென்னையில் வருமான வரித்துறை அலுவலகத்தை இழுத்து மூடச் சென்ற கழகத் தோழர்கள் கைது; வழக்குப் பதிவு

காவிரிப் பிரச்சினையில் பா.ஜ.க. ஆட்சியின் துரோகத்தைக் கண்டித்து சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் சென்னை நுங்கம்பாக்கத்திலுள்ள வருமான வரித்துறை அலுவலகத்தை இழுத்துப் பூட்டும் போராட்டத்தைக் கழகம் அறிவித்தது. வருமான வரித் துறை அலுவலகம் எதிரே கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையில் தோழர்கள் தமிழ்நாட்டில் மத்திய அரசு அலுவலகங்களை இயங்கவிட மாட்டோம் என்ற முழக்கத்தோடு வருமான வரித் துறை அலுவலகம் நோக்கி சென்றனர். காவல்துறையினர் தடுத்து நிறுத்தி, கழகத் தோழர்களைக் கைது செய்தனர். பூட்டு - பூட்டுச் சங்கிலியை பறி முதல் செய்தனர். மாலை வரை ஆயிரம் விளக்கு சமூகநலக் கூடத்தில் வைக்கப்பட்டு, சொந்தப் பிணையில் காவல்துறை விடுதலை செய்தது. அனைவர் மீதும் காவல்துறை வழக்குப் பதிவு செய்துள்ளது. சென்னை மாவட்டக் கழகப் பொறுப்பாளர்கள் வேழவேந்தன், உமாபதி, ஏசு, செந்தில் (எப்டி.எல்.), மயிலை சுகுமார், தலைமைக் கழகச் செயலாளர் தபசி குமரன், ஜாதி ஒழிப்பு முன்னணியைச் சேர்ந்த ஜெயநேசன் உள்ளிட்ட 55 தோழர்கள் கைதானார்கள்.



காவலில் இருந்த தோழர்களிடம் பிற்பகலில் காவிரிப் பிரச்சினைக் குறித்து பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், ஜெயநேசன் ஆகியோர் உரையாற்றினர். கழகத் தோழர்கள் களப்பணிகளில் கழகத்தின் தொடர் செயல்பாடுகளையும் கழகம் எதிர்நோக்கும் சவால்களையும் விளக்கிப் பேசினர்.

# வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தில் உச்சநீதிமன்றம் போடும் ஓட்டைகள்

இந்தியாவில் 18 கோடிக்கும் மேற்பட்டவர்கள் ஒடுக்கப்பட்ட சமூகத்தவர்கள். ஒவ்வொரு 15 நிமிடத்துக்கும் ஒரு முறை ஒரு தலித் தாக்கப்படுகிறார்; நாள்தோறும் 6 தலித் பெண்கள் பாலியல் வன்முறைக்கு ஆளாகின்றனர். 2007 முதல் 2017 வரையிலான பத்தாண்டுகளில் தலித்துகளுக்கு எதிரான குற்றச்செயல்கள் 66% அதிகரித்துள்ளன. கடந்த பத்தாண்டுகளில், தலித் பெண்களைப் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்குவதும் இரட்டிப்பாகியிருக்கிறது. இந்த நிலையில்தான், வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் தொடர்பான வழக்கில் ‘அப்பாவிகள் மீது பொய்ப் புகார்கள் அளிக்கப்பட்டு அலைக்கழிக்கப் படுவதாகவும், குற்றம்சாட்டப்பட்டவர்கள் ஜாமீனில் வெளிவர முடியாமல் இருப்பதை நீக்க வேண்டும்’ என்றும் உச்ச நீதிமன்றம் கருத்து தெரிவித்திருக்கிறது.

தலித் மக்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பாக ’தேசிய குற்றப்பதிவு ஆணையம்’ (என்சிஆர்பி) அளித்துள்ள தரவுகள் எள் முனையளவைப் போன்றது; பெரிய மலையளவுக்கு குற்றங்கள் மறைக்கப்படுகின்றன. காரணம், ஆதிக்க சாதியினர் பழிவாங்குவார்கள் என்ற அச்சத்தில் பெரும்பாலானவர்கள் புகார் செய்வதே இல்லை. அப்படியே புகார் ஏற்கப்பட்டு, நீதிமன்றத்தில் வழக்கு நடந்தாலும் குற்றம்சாட்டப்பட்டவர் மீதான புகாரை நிரூபிக்க போதிய ஆதாரம் இல்லை என்ற வகையில் விடுதலையாகிவிடுவார். இதற்குக் காரணம் இத்தகைய வழக்குகளில் ஒவ்வொரு நிலையிலும் சாதிச் சார்புநிலை அப்பட்டமாக வெளிப்படுவதுதான்.

காசிநாத் மகாஜன் வழக்கில், உச்ச நீதிமன்ற நீதிபதிகள் ஏ.கே. கோயல், யு.யு. லலித் ஆகியோர், முன்ஜாமீன் வழங்கத் தடை விதிக்கும் சட்டப் பிரிவு குறித்து நோக்கத்துடன் விளக்கம் அளித்து, சட்டத்தையே நீர்த்துப்போக வைத்துள்ளனர். இந்தத் தீர்ப்பானது சாதிரீதியான அக்கிரமங்களுக்கு முக்கியத்துவம் தரவில்லை; இன்றைக்கும் கடைப்பிடிக்கப்படும் தீண்டாமைக் கொடுமைபற்றி ஏதும் கூறாமலேயே புறக்கணிக்கிறது. தலித்துகள் தங்களுடைய உரிமைகளை வலியுறுத்தும் போதெல்லாம் ஆதிக்க சக்திகள் அவர்களைக் கடுமையாக அடக்கி ஒடுக்குகின்றன என்று இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதற்கான காரண விளக்கத்தில் அரசே குறிப்பிட்டிருக்கிறது. தலித்துகளுக்கு எதிராக நிகழ்த்தப்படும் கொடுமைகளின் தீவிரத்தன்மையைக் கருத்தில்கொண்டே, ’குற்றம் சாட்டப்படுபவர்கள் ஜாமீனில் வெளிவர முடியாதபடியான பிரிவு’ சட்டத்தில் சேர்க்கப்பட்டது. இச்சட்டப்படி தண்டிக்கப்படக்கூடிய குற்றங்கள் எவை என்ற பட்டியலைப் பார்த்தாலே, ஜாமீன் மறுக்கப்படுவற்கான காரணமும் புரியும். இத்தீர்ப்பின்போது நீதிபதி கோயல் சுட்டிக்காட்டிய ’கர்தார் சிங் வழக்கில்’ தீர்ப்பளித்த ஐந்து நீதிபதிகள் அடங்கிய அமர்வும் அரசியல் சட்டப்படியே இந்த முன்ஜாமீன் மறுப்பு இருப்பதாகக் கூறி ஏற்றிருக்கிறது.

தலித்துகளுக்கு எதிரான குற்ற வழக்குகளில் விசாரணை முடிந்து தண்டனை வழங்கப்படுவது மிகவும் குறைவாக இருப்பதால், இந்தப் புகார்கள் போலியானவை என்ற தவறான எண்ணம் பலருக்கு ஏற்படுகிறது. இந்த எண்ணம் உண்மையல்ல என்பதை தேசியக் குற்றப்பதிவு ஆணையத்தில் உள்ள தரவுகள் உணர்த்துகின்றன. இந்த சட்டப்படி பதிவுசெய்யப்படும் போலி வழக்குகளின் எண்ணிக்கை 2009-2015 காலத்தில் குறைந்துவிட்டன; அத்துடன் தண்டனை விதிக்கப்படும் வழக்குகளின் எண்ணிக்கையும் 2013இல் 23.8% ஆக இருந்தது 2014இல் 28.8% ஆக உயர்ந்திருக்கிறது. பாஜக ஆட்சிக்கு வந்த பிறகு 2015இல் இது ஏன் குறைந்தது என்பது தனியாக ஆராயப்பட வேண்டும். சாதாரணக் குற்றவழக்குகளின் எண்ணிக்கையையும் சாதி, இனம், மதம் போன்றவற்றின் அடிப்படையில் வெறுப்பில் நிகழ்த்தப்படும் குற்றங்கள் தொடர்பான வழக்கு எண்ணிக்கையையும் ஒப்பிடுவதே நியாயமுமில்லை, பகுத்தறிவுக்கு ஏற்றதும் இல்லை.

மோசமான புலன் விசாரணையும், திறமையற்ற வழக்கு தொடுப்பும்தான் இந்த எண்ணிக்கைகள் குறைவதற்கு முக்கியக் காரணம். இத்தகைய வழக்குகளில் சாட்சிகள், பெரும்பாலும் பிறழ்சாட்சிகளாகிவிடுகின்றனர். பயங்கரவாதத் தடுப்புச் சட்டப்படி தொடரும் வழக்குகளிலும் தண்டனை பெறுவது மிகவும் குறைவாகத்தான் இருக்கிறது; அதனால் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் பிரிவுகளையும் தளர்த்திவிடலாமா? குற்றம்சாட்டப்பட்டவர் நிரபராதியாக இருக்கலாம் என்று கருத வேண்டும் என்றால், எல்லா வழக்குகளிலும் எல்லா சட்டங்களிலும்கூட இப்படிக் கருதி முன்ஜாமீன் பெறும் உரிமையை எதிரிகளுக்கு வழங்கிவிடலாமே!

விவாதத்துக்குள்ளான இந்த வழக்கில், தலித் அல்லாத அதிகாரிகள் தலித் அரசு ஊழியருக்கு எதிராகப் பாதிப்பை ஏற்படுத்தும் விதத்தில் குறிப்புகளை எழுதுவது அல்லது வழக்கு தொடுக்க அனுமதி தராமலிருப்பது போன்றவை வன்கொடுமைத் தடுப்புச் சட்டப்படியான குற்றமாகக் கூட இல்லாமல் இருக்கலாம். இந்த வழக்கில்கூட ’எதிரி’க்கு முன்ஜாமீன் வழங்கப்பட் டிருக்கிறது ;

அவருக்கு எதிரான குற்ற வழக்கைத் தள்ளுபடி செய்ய உயர் நீதிமன்றம் மறுத்துவிட்டதால் உச்ச நீதிமன்றத்தில் முறையிட்டிருக்கிறார். வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்தவும் வாய்ப்புகள் இருந்தாலும், அதன் தண்டனையளிக்கும் பிரிவுகளில் குற்றம்காணக் கூடாது. அப்படிச் செய்தால் அது நசுக்கப்பட்ட மக்களுக்குத் தவறான சமிக்ஞையை அளித்துவிடும் என்று உயர் நீதிமன்றம் கூறியிருக்கிறது. ஆனால் உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பு மூலம் தவறான சமிக்ஞைகளைத்தான் வெளியிட்டிருக்கிறது.

ஏற்கெனவே ஒப்புக்கொள்ளப்பட்ட நீதி சார்ந்த கருத்துகளிலிருந்து உச்ச நீதிமன்றம் இப்போது விலகியிருக்கிறது. முன்ஜாமீன் என்பது 1973இல் தான் சட்டத்தில் சேர்க்கப்பட்டது; இது வரையறைக் குட்பட்ட அரசியல் சட்டப்படியான உரிமையே தவிர வாழ்வுரிமை, தனிப்பட்ட சுதந்திர உரிமை ஆகியவற்றை உறுதிசெய்யும் அரசியல் சட்டத்தின் 21ஆவது பிரிவின் கீழ் அல்ல என்று உச்ச நீதிமன்றம் ஏற்கெனவே கூறியிருக்கிறது. நீதிபதி கோயலின் தீர்ப்பானது தலித்துகளுக்கு எதிரான குற்றங்களுக்காக வழக்குக்கு ஆளாகும் அதிகாரிகளுக்குச் சாதகமாக அதிக இடம் கொடுத்திருக்கிறது. குஜராத் உயர் நீதிமன்றத் தீர்ப்பிலிருந்து அவர் நிறைய மேற்கோள் காட்டியிருக்கிறார். வன்கொடுமைத் தடுப்புச் சட்டப்படியான வழக்குகளில் மிகமிகக் குறைந்த அளவுக்கே தண்டனை வழங்கியுள்ள மாநிலம் குஜராத் என்பதுதான் கவனிக்க வேண்டிய விஷயம்.

இந்த வழக்கில் அரசுத் தரப்பு வாதத்தைத் தீர்ப்பில் ஒரு பத்தி மட்டுமே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது; அதற்கும் மேல் சொல்ல ஏதும் இல்லை. அரசுத்தரப்பு இந்த வழக்கில் இப்படி ஆர்வமே இல்லாது அலட்சியத்துடன் வாதாடியதில் நமக்கு வியப்பு ஏதும் இல்லை!

இப்போது புதிய தீர்ப்புக்குப் பிறகு பூர்வாங்க விசாரணையின்றி முதல் தகவல் அறிக்கையைக்கூட பதிவு செய்ய முடியாது. அப்படியே முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்டாலும், அவருடைய மேல் அதிகாரி அனுமதி தராமல் கைதுசெய்ய முடியாது. காவல் துறையின் மூத்த கண்காணிப்பாளரின் ஒப்புதலின்றி யார் மீதும் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்ய முடியாது.

தலித்துகளுக்கு எதிராகக் குற்றங்கள் இழைக்கப்பட்டாலும் காவல் துறையிடம் புகார்செய்வது ஏற்கெனவே குறைவாக இருக்கிறது. இந்தத் தீர்ப்புக்குப் பிறகு அவர்களுக்கு அச்சமே அதிகமாக இருக்கும். மத்திய அரசு விரைந்து இந்தத் தீர்ப்புக்கு எதிராக மறு சீராய்வு மனு தாக்கல் செய்ய வேண்டும்!

‘இந்து’ ஏட்டில் எழுதிய கட்டுரையின் தமிழாக்கம் –
கட்டுரையாளர்: ஃபைசான் முஸ்தஃபா

குறிப்பு : வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் பிரிவுகளின் கடுமையை நீர்த்துப் போகச் செய்த வழக்கில் அரசுத் தரப்பில் சரியாக வாதங்கள் முன் வைக்கப்படவில்லை. இப்போது தலித் மக்ககளின் போராட்டத்தினால் நடுவண் ஆட்சி மறு சீராய்வு மனுவை தாக்கல் செய்யப் போவதாக அறிவித்துள்ளது.

## மக்கள் இயக்கங்களை முடக்கப் போகிறார்களாம்!

தேர்தல் அரசியலில் ஈடுபடாத மக்கள் விடுதலைக்கு மக்களோடு மக்களாக இணைந்து செயல்படும் இயக்கங்களைக் குறி வைக்கிறது – நடுவண் ஆட்சி.

தமிர்நாட்டில் 11 இயக்கங்களைத் தடை செய்வது குறித்து பரிசீலிக்கிறார்களாம். அவர்களைப் பற்றிய தகவல்களை உளவுத் துறை சேகரித்து வருகிறதாம். ‘தமிழ் இந்து’ நாளேடு இப்படி ஒரு செய்தியை வெளியிட்டிருக்கிறது.

தமிழ்நாட்டு மக்களின் வாழ்வாதாரத்தை சீரழித்து சுற்றுச் சூழலை – மண் வளத்தைப் பாழக்கி வருகின்றன பன்னாட்டு நிறுவனங்கள். பார்ப்பனர்களின் அதிகாரக் கட்டுப்பாட்டில் செயல்படும் ஓ.என்.ஜி. நிறுவனம் ஆபத்தான திட்டங்களை அதிகாரத் திமிரோடு மக்களிடம் திணிக்கிறது.

மீத்தேன், ஹைடிரோ கார்பன், ஸ்டெர்லைட், அணுமின் நிலையம் என்று பல்வேறு பெயர்களில் திணிக்கப்படும் இந்தத் திட்டங்களின் ஆபத்துகளை அறிவியல் பார்வையில் – அதன் சுரண்டல் மோசடிகளை மக்களிடம் எடுத்துக் கூறி விழிப்புணர்வை ஏற்படுத்தும் இயக்கங்கள்தான் – தங்களின் உண்மையான எதிரிகள் என்ற நினைக்கிறது. பார்பபன – பனியா – பன்னாட்டுக் கூட்டுக் கொள்ளைக்காக அதிகாரத்தைப் பயன்படுத்தும் ‘இந்துத்துவா’ நடுவண் ஆட்சி.

தடை செய்யப்பட வேண்டியது மக்ககளின் வாழ்வுரிமைக்கு எதிரான ஆபத்தான திட்டங்களையா? அல்லது அதை மக்களிடம் எடுத்துச் சொல்லி விழிப்புணர்வூட்டும் இயக்கங்களையா? தமிழ்நாட்டில் தொலைக்காட்சிகளில் பாதுகாப்பாக அமர்ந்து கொண்டு திமிர் நிறைந்த சொற்கள் – உடல்மொழிகளோடு பா.ஜ.க. பேச்சாளர்கள் மோடி ஆட்சியின் ஒவ்வொருமக்கள் விரோத செயல் பாட்டையும் நியாயப்படுத்துகிறார்கள். எதிர்த்துப் பேசுவோரை மிரட்டுகிறார்கள்.

அதே திமிர்ப் பேச்சுக்களை ‘அவாள்’களால் தமிழ்நாட்டில் எந்த ஊரிலும் மேடைப் போட்டுப் பேச முடியுமா என்று சவால் விட்டுக் கேட்கிறோம். **இவர்கள் மக்களின் சமூகத் தடைக்கு உள்ளாக்கப்பட்டவர்கள்.**

மக்களால் அன்னியப்பட்டு, அவர்களின் கொதிப்புக்கு உள்ளாகியிருக்கும் கூட்டம், தமிழ்நாட்டில் மக்களுக்காகக் களத்தில் நிற்கும் இயக்கங்களைத் தடை செய்தால், பா.ஜ.க.வின் மீதான மக்கள் விதித்துள்ள சமூகத் தடை மேலும் வலிமைப் பெறவே செய்யும்.

## வஞ்சிக்கப்படும் தமிழ்நாடு: ஈரோட்டில் தெருமுனைக் கூட்டம்

ஈரோடு தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பாக ஈரோடு சி.எம். நகரில் 1.4. 2018 ஞாயிறன்று காவிரி மேலாண்மை வாரியம் அமைப்பதிலும் ஸ்டெர்லைட் ஆலை , நியூட்ரினோத் திட்டம் வழியாக மோடி பயங்கரவாத அரசு தமிழகத்தை வஞ்சித்து வருவதையும் மக்களிடையே தெளிவுபடுத்தும் தெருமுனைக் கூட்டம் நடத்தப்பட்டது. கூட்டத்திற்கு சி.எம். நகர் பிரபு தலைமையேற்க யாழ் எழிலன் வரவேற்புரை நிகழ்த்தினார். மணிமேகலை, வீரா கார்த்தியைத் தொடர்ந்து தலைமைக் கழகப் பேச்சாளர் கோபி வேலுச்சாமி சிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் அரங்கம்பாளையம் கிருஷ்ணன், சித்தோடு கமலக்கண்ணன், சென்னிமலை செல்வராஜ், சௌந்தர், சத்தியராஜ், கோபி தங்கம் போன்றோர் பங்கேற்க மாவட்டப் பொருளாளர் பெ.கிருஷ்ணமூர்த்தியின் நன்றியுரையோடு கூட்டம் சிறப்புடன் முடிந்தது.

# கோவையில் பெரியாரிய பெண்கள் சந்திப்பு

மாவட்ட வாரியாக நடந்து வந்த பெரியாரிய பெண்கள் சந்திப்பு 1.4.2018 அன்று கோவையில் நடந்தது. தோழர்களை உருவாக்குவதற்கும், உருவான தோழர்களை களப்பணியாளர்களாக தயாராவதற்காகவும் இந்த சந்திப்புகள் நடந்து வருகின்றன. கோவையில் இரத்தினசபாபதிபுரத்தில் (ஆர்.எஸ்.புரம்) பெரியார் பெருந்தொண்டர் கஸ்தூரியார் படிப்பகத்தில் அவருடைய மகன் தேவேந்திரன் சந்திப்பு நிகழ்வை நடத்த மகிழ்வுடன் அனுமதி அளித்தார். பெரியார் பிஞ்சு தமிழினி கடவுள் மறுப்பு சொல்லி நிகழ்வைத் தொடங்கி வைத்தார்.



சந்திப்பில் பல்வேறு தலைப்புகளில் தோழர்கள் பேசினர். ‘மதங்கள் பெண்களுக்கு எதிரானவை ஏன்?’ என்ற தலைப்பில் ஆனைமலை வினோதினி, ‘பெரியாரியக்கத்தின் பெண் தளபதிகள் பற்றிய நினைவுகள்’ என்ற தலைப்பில் கோபி மணிமொழி, ‘திராவிடர் இயக்கத்திற்கு முன்னும் பின்னும் பெண்கள் நிலை’ என்ற தலைப்பில் பவானிசாகர் கோமதி ஆகியோர் தங்கள் கருத்துகளை முன் வைத்தனர். ஒவ்வொருவர் கருத்திற்குமிடையேயும் விவாதங்கள் நடந்தன. இறுதியாக தோழர்களின் சந்தேகங்களுக்கும் மக்களிடையே உறவினர்களிடையே சந்திக்கும் சவால்கள் குறித்தும் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு ஆசிரியர் சிவகாமி பதில் கூறினார். மதி நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவடைந்தது. தோழர்கள் இந்துமதி, வைதீஸ்வரி, பொன்மணி, இராஜாமணி, தமிழினி, அம்பிகா, கோமதி, மணிமொழி, தேன்மொழி, சரஸ்வதி, சிவகாமி, கிருபா நந்தினி, வினோதினி ஆகியோர் சந்திப்பில் பங்கேற்றனர்.

## சென்னை கருத்தரங்கில் விடுதலை இராசேந்திரன் பேச்சு (8)

# மனுநீதி கொன்ற சோழனா? மனுநீதி கொண்ட சோழனா?

*‘ஆண்டாள் முதல் சங்கராச்சாரி வரை... தமிழை மறுக்கும் வேதமரபுகள்’ என்ற தலைப்பில் ஜன.30, 2018 அன்று சென்னை இராயப்பேட்டை ஆனந்த் அரங்கில் திராவிடர் விடுதலைக் கழகம் நடத்திய கருத்தரங்கில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் நிகழ்த்திய உரையின் விரிவாக்கம். (சென்ற இதழ் தொடர்ச்சி)*

ஆண்டாள் - தேவதாசி மரபு என்று ஆய்வாளர் கூறிய கருத்தைக்கூட பேசினால் அது இந்துமத அவமதிப்பு என்று கூப்பாடு போடுகிறவர்களுக்கு அவாளின் வேதம் ஒன்றையே பதிலாக எடுத்துக் காட்டலாம்.

> “வேஸ்யா தரிசனம் புண்யம்
> ஸ்பர்சனம் பாப நாஸம்
> சம்பனம் சர்வதீர்த்தா னாம்
> மைதுனம் மோஷ சாதனம்”

- என்பது ஒரு சுலோகம்.

வேசிகளைப் பார்த்தால் புண்ணியம்; அவர்களைத் தொட்டால் பாவம் போய்விடும்; முத்தம் கொடுத்தால் சகல புண்ணிய தீர்த்தங்களிலும் நீராடியதற்குச் சமமான புண்ணியம்; உடலுறவு கொண்டால் மோட்சத்தை அடையும் வழி - இதுவே மேற்குறிப்பிட்ட சுலோகத்தின் பொருள். இந்த சுலோகங்களைத் தடை செய்ய வேண்டும் என்று சொன்னால்கூட - அப்போதும் ‘இந்து விரோதி’ என்றுதான் கூச்சல் போடுவார்கள்.

வேத மரபு கட்டமைத்த ஒழுக்க நெறிகள் எப்படி இருந்தன என்பதற்கு மற்றொரு உதாரணத்தைக் கூற வேண்டும். தந்தையைக் கொலை செய்துவிட்டு, தாயுடன் உலுறவு கொண்ட ஒரு பார்ப்பன சிறுவனுக்கு வேத மரபில் ‘பரிகாரம்’ இருக்கிறது. அந்தப் பரிகாரத்தை செய்தால், ‘பாவம்’ பறந்தோடி விடும். ‘பிராமணன்’ கொலை செய்தால்கூட அவனுக்கு தலையில் ஒரு முடியை வெட்டி விடுவதுதான் தண்டனை. ஆனால் சூத்திரன் கொலை செய்தால் தலையையே துண்டிக்க வேண்டும் என்ற ‘மனுசாஸ்திரம்’ தான் வேத மரபுக்கான ‘நீதி நூல்’; பிரிட்டிஷ் ஆட்சியில் மெக்காலே அனைத்து மதத்தினருக்கும் பொதுவான கிரிமினல் சட்டம் கொண்டுவரும் வரை இந்த ‘மனுசாஸ்திரமே’ நீதிமன்றங்களின் சட்ட நூல். மனு சாஸ்திரத்தை நீதி நூலாகப் பின்பற்றக் கூடாது; கிரிமினல் சட்டத்தைப் பின்பற்ற வேண்டும் என்று பிரிட்டிஷ் ஆட்சி நெருக்கடி தந்த காரணத்தால் திருவாங்கூர் சமஸ்தான திவானாக இருந்த சர்.சி.பி. இராமசாமி அய்யர், தனது சமஸ்தானத்தில் தூக்குத் தண்டனைக்கே தடை விதித்தார். கொலை செய்யும் ‘பிராமணர்’களுக்கு தூக்குத் தண்டனை வழங்கிடும் நிலை வந்துவிடக் கூடாது என்பதே அவரை இந்த முடிவை எடுக்கச் செய்ததே தவிர, மனித உரிமையின் மீதான கவலையில் அல்ல. தாயுடன் தகாத உறவு கொண்டவனுக்கும் ‘பிராயச்சித்தம்’ வைதிக மதத்தில் இருக்கிறதா என்று ஆச்சரியப்படக் கூடாது.

‘திருவிளையாடல் புராணத்தில், ‘மாபாதகம் தீர்த்த படலம்’ என்று ஒரு படலம் வருகிறது. அதிலே வரும் 40ஆவது பாடல், இந்தக் கதையைக் கூறுகிறது. இந்த பிராயச்சித்தத்துக்காக தஞ்சை மாவட்டம், வேதாரண்யம் ஊரில் கோயிலும் திருக்குளமும் இப்போதும் இருக்கிறது. ஸ்ரீ வேதாரண்யோஸ்வர சுவாமி தேவஸ்தானம் வெளியீடாக கோயில் நிர்வாகமே ‘வேதாரண்யம் தல வரலாறு’ என்று நூலாக வெளியிட்டிருக்கிறது. அதில் உள்ள கருத்தை அப்படியே தருகிறோம்:

> “வேதாரண்யத்திற்கு அண்மையிலுள்ள ராமச்சந்திரபுரத்திலே ஒரு பிராமணன் வாழ்ந்து வந்தான். தன் மகன் பிறந்த ஜாதகத்தைப் பார்த்தான். மகன் பதினாறாவது வயதில் தாயைப் புணர்தல், பசுக்கொலை, கள் குடித்தல் முதலிய பாவங்களைச் செய்வான் என்றிருந்தது. இதே கவலையாக இருந்து பிராமணன் இறந்தான். மகன் கண்ணில் தந்தை எழுதி வைத்திருந்த சாதகக் குறிப்பு அகப்பட்டது. அதனைப் படித்துப் பார்த்த மகன் அஞ்சியழுது, தேறி, இவ்வளவு பாவங்களையும் நான் இங்கிருந்தாலல்லவா செய்யக் கூடும் எங்காவது தேசாந்தரம் போய் விடுவோம் எனப் புறப்பட்டுக் கங்கை வரை சென்று பல ஆண்டுகளைக் கழித்தான். தனக்கு பதினாறு வயது கழிந்திருக்கும் என்று எண்ணிக் கொண்டு ஊருக்குத் திரும்பினான். இரவு நேரம். வழக்கம்போல ஊரில் பிச்சை எடுத்து அதனை உண்பதற்காக ஒரு வீட்டுத் திண்ணையை அடைந்தான். அங்கே ஓரிளம் விதவை வேலைக்காரியாக இருந்தாள். இவனைக் கண்டதும் இவன் இளமையிலும் அழகிலும் மயங்கி அவன் விருப்பப்படி இடமும், பிறவும் அளித்து உபசரித்தாள். எப்படியாவது இவனைக் கூட வேண்டும் என்று துடித்தாள். அவன் குடிப்பதற்காக நீர் கேட்டான். அவளோ, இவன் தன் வலையில் சிக்க மாட்டான் என்பதையறிந்து மதுவையே நீரென்று கொடுத்தாள். அவனும் மதுவை இதுவரையறியாதவனாகையாலே உண்டான். மதி மயங்கினான். பக்கத்திலிருந்த பசுவைக் கொன்றான்; காமந் தலைக்கேறி, அவ்விதவையைப் புணர்ந்தான். பொழுதும் விடிந்தது. மது மயக்கமும் தெளிந்தது. தான் செய்த தவறுகளை நினைத்து வருந்தி, அவ்விதவையைப் பார்த்து - நீ யார்? உன் வரலாறு என்ன? என்று கேட்டான். அவள் நடந்ததைச் சொன்னாள். அவன் விதி வலி கொடிது, வெல்லுதற்கரியது என வருந்தினான். இப்பழித் தொலையும் வழி யாது என அலைந்தான். ஒன்றும் புலப்படவில்லை. வாளினால் கழுத்தை யரிந்து கொண்டாவது இறப்போம் எனத் துணிந்து வாளால் கழுத்தையறுத்துக் கொண்டான். அப்போது வேதாரண்யேசர் திருமுன் சென்று அவன் கையைப் பிடித்துத் தடுத்து, ஏ அந்தணா! இதற்குத் தற்கொலையும் செய்து கொண்டு அப்பாவத்தையும் சுமக்க எண்ணுகிறாயா? திருமுறைக்காட்டில் மணிகர்ணிகையில் மூழ்கி வேதவனேசரை வழிபட்டால் எல்லாப் பாவங்களும் நீங்கும், அப்படியே செய் என்றருளினார்.
>
> பிரம்மச்சாரியும் அப்படியே மூழ்கி உய்ந்தான்; அவன் தாய் வழிபாட்டுச் சத்தி பதம் பெற்றாள்”

எப்படி இருக்கிறது வேத மரபு? இதை திரைப்படம் எடுத்தால்கூட சென்சார் போர்டு அனுமதிக்காது.

### ‘பிராமணர்’ பூணூலை அறுக்கச் சொன்னார் திருமூலர்

இந்தத் தலப் பெருமைகளையும், ‘தீர்த்த’ புண்ணியங்களையும் வேதமரபு போற்றுகிறது. தமிழ் மரபு எப்படி இந்த வேதமரபுகளை ஏற்கும்? வேத மரபுக்குள் கீழ்ப்படிந்து ஒழுகுவதே ‘இந்து மரபு’ என்று காலம்காலமாய் பார்ப்பனியம் தமிழர்களை ஏமாற்றி, அவர்களை ஏற்கச் செய்திருக்கிறது என்பதுதான் கொடுமை.

வேத மரபுகளை மறுத்த தமிழ் மன்னர்களும் வரலாற்றில் இடம் பெற்றிருக்கிறார்கள். சைவர்கள் போற்றும் சேக்கிழார் எழுதியப் ‘பெரியபுராணம்’ மனுநெறி கொண்ட சோழன் கதையைக் கூறுகிறது. மன்னனின் மகன் தேர்ப் பவனியில் வரும்போது தேர்ச் சக்கரத்தில் பசுவின் கன்று ஒன்று சிக்கி செத்தது. பசுவைக் கொன்றது வேத மரபுப்படி ‘மாபாதகம்’. எனவே மன்னன் தனது மகனையே தேர்ச் சக்கரத்தில் ஏற்றிக் கொலை செய்து தனக்குத் தானே தண்டனை விதித்துக் கொண்டான் என்ற கதை எல்லோருக்கும் தெரியும். ‘மனுநீதி தவறாமல்’ ஆண்ட மன்னன் என்று இதுவரை வைதிகர்களால் புகழப்படுகிறான். உண்மையில் மன்னன் பசுவைக் கொன்றதற்கு தண்டனையாக மகனைக் கொன்றது மனுநீதியை ஏற்றுக் கொண்டதற்காக அல்ல; மனுநீதியை எதிர்ப்பதற்காகவே என்பது பலருக்கும் வியப்பைத் தரலாம். உண்மை அதுதான். பெரிய புராணத்திலேயே அதற்கான குறிப்புகள் இருப்பதை ஆய்வாளர்கள் எடுத்துக் காட்டுகிறார்கள். மகன் தேர்க்காலில் பசுவின் கன்று இறந்தவுடன் மன்னர்களுக்கு அமைச்சர்கள் சொல்லிய ஆலோசனை, ‘பிராமண தர்மம் கூறும் பரிகாரங்களை பிராமணர்களுக்கு செய்துவிட்டால் போதும்’ என்பதுதான்.

> “மறை, அந்தணர்கள் விதித்த முறை வழி
> நிறுத்தல் அறம் என்றார்”

- என்று பெரிய புராணம் கூறுகிறது.

‘பிராமணர்களுக்கு பிராயச் சித்தம்’ - அதாவது பார்ப்பனர்களை அழைத்து, வேத மந்திரங்களை ஓதச் செய்து அவர்களுக்கு பொன் பொருளை வாரி அவர்கள் வயிற்றில் கொட்டும் ‘பிராயச்சித்தத்தைச்’ செய் என்றவுடன், மன்னன் கொதித்துப் போகிறான். மக்களையும், நாட்டில் வாழும் உயிர்களையும் காப்பாற்ற வேண்டியது ஒரு மன்னனின் கடமை; மக்களுக்கோ வேறு உயிருக்கோ, தன்னாலோ, தனது குடும்பத்தாலோ, படை வலிமையின்மையாலோ, திருடர்களாலோ ஆபத்து வராமல் மக்களைக் காக்கும் கடமையிலிருந்து ஒரு மன்னன் தவறினால் அவன் அறத்தைக் காப்பாற்றத் தவறுகிறான்” என்று கூறுகிறான். மக்களை - உயிர்களைக் காப்பாற்றத் தவறிய மன்னன் அதற்கான தண்டனையை தனக்குத் தான் வழங்க வேண்டுமே தவிர, பிராமணர்களுக்கு ஏன் பிராயச் சித்தம் செய்ய வேண்டும் என்று கூறி, மகனைத் தேர்க் காலில் ஏற்றிக் கொன்றான். ‘மனுதர்மம்’ கூறிய ‘பிராமண பிராயச் சித்தம்’ செய்து பாவத்தைத் துடைத்துக் கொண்டேன் என்ற அவப்பெயரை ஏற்க நான் தயாராக இல்லை என்பதை,

> ‘தொன் மனுநூல் தொடை மனுவால்
> துடைப்புண்டதெனும் வார்த்தை
> எனைச் சேரும்’

என்று கூறி தனது மகனை அதே தேர்க்காலில் ஏற்றிக் கொல்கிறான். பசுவைக் கொன்றது ‘மாபாதகம்’ என்பதற்காக அல்ல, மாறாக தனது ஆட்சியில் எந்த உயிரும் இப்படி சாகடிக்கப்படக் கூடாது என்பதே அவனது கொள்கை. உண்மையில் மனுநீதியைக் **கொன்ற** சோழன் அவன். ஆனால் அவனை மனுநீதி **கொண்ட** சோழனாக திரித்து விட்டது வைதிகம்.

சைவம் - தமிழர் மதம் என்று சைவத் தமிழர்கள் பெருமைப்பட்டாலும் அதற்குள்ளும் பார்ப்பனியமே ஊடுருவி நின்றதை பெரியாரும் குடிஅரசும் வெளிச்சப்படுத்தின. மதம் குறித்த ஆய்வாளர்கள் சைவத்தில் சித்தாந்த மரபு, வேதாந்த மரபு என்று இருவகைப்படுத்துகிறார்கள். வேதாந்த மரபு, வேத வைதிகப் பார்ப்பனியத்தை ஏற்றது. இதற்கு நேர் எதிராக சைவத்திலேயே திருமூலர் போன்றவர்கள் ‘சித்தாந்த மரபு’ காரர்களாக இருந்து பார்ப்பன மரபுகளை எதிர்த்தார்கள். அப்பபடி எதிர்த்தவர்களிலே ஒருவர் திருமூலர்.

பூணூல் உச்சி குடுமி அறுப்பு பற்றி திருமூலர் கூறுகிறார் :

> மூடங் கெடாதோர் சிகைநூல் முதற்கொள்ளில்
> வாடும் புவியும் பெருவாழ்வு மன்னனும்
> பீடு ஒன்று இலாகும் ஆதலாற் பேர்த்து உணர்ந்து
> ஆடம்பர நூல் சிகை அறுத்தால் நன்றே
>
> -திருமந்திரம் -241 (நூல் - பூணூல், சிகை-குடுமி )

அறியாமையை போக்கிக் கொள்ளாத பார்ப்பனர்கள் உச்சி குடுமியும் பூணூலும் பெற்று இருப்பார்களேயானால், இந்த மண்ணுலகானது சோர்வடையும். பெருமை பொருந்திய வாழ்வினை உடைய மன்ன வனும் தனது சிறப்புகளை இழப்பான். ஆதலால் இதனைப் பகுத்துணர்ந்து பார்ப்பானுடைய ஆடம்பர பூணூலையும் உச்சிக் குடுமியையும் அறுத்தெறிவதே நல்லதாகும் - என்கிறார் திருமூலர்.

தமிழ்நாட்டு மதங்களாகக் கூறப்படும் சைவ வைணவ மதங்களுக்கு வடமொழி வேதங்களின் அடிப்படையில் பொருள் உரைக்கும் முயற்சிகள் நடந்தன. “வேத வாக்கியங்களுக்கு சைவத்திற்கும், வைணவத்திற்கும் ஏற்ற முறையில் பொருள் கொள்ளுதல் பைபிளுக்கும், குரானுக்கும் சைவ, வைணவப் பொருள் கொள்ளுதல் போலாகும்” என்று கண்டித்தார், ஆய்வாளர் கா.சு.பிள்ளை. திருமூலரைப்போலவே வள்ளலாரும் சைவ மரபில் வைதிக மத எதிர்ப்பாளராக வாழ்ந்து காட்டினார். சைவ மடாதிபதிகளையே எதிர்த்தவர் ‘தீட்சை’ பெறுவதற்கு சைவ மடங்களைத் தேடிச் செல்ல வேண்டும் என்ற மரபை உடைத்துத் துறவியானவர். சைவ மடங்களில் வடமொழி கற்பிக்கப்பட்டு, வட மொழியின்றி தமிழ் தனித்து இயங்க முடியாது என்று பேசிய சைவப் பார்ப்பனியர்களின் கருத்தை மறுத்தவர் வள்ளலார். வள்ளலார் ஏற்படுத்தியது ‘மடம்’ அல்ல. சமசர சன்மார்க்க சங்கம், காவி உடையைத் தவிர்த்து, வெள்ளை உடையைத் தேர்வு செய்தார்.

> “சாதிகளிலே மதங்களிலே சமய நெறிகளிலே
> சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரச் சடையிலே
> ஆதியிலே அபிமானித்து அபிமானித்து
> அலைகின்ற உலகீர்”

என்று எழுதினார். வள்ளலாரின் அருட்பா ஆறாம் திருமுறையில் 100 பாடல்களைத் திரட்டி, 1935இல் பெரியார் ‘குடிஅரசு’ பதிப்பக சார்பில், ‘இராமலிங்க சாமிகள் பாடல் திரட்டு’ என்று நூலாக வெளியிட்டார். பெரியார் வாழ்க்கை வரலாற்று நூலான ‘தமிழர் தலைவர்’ நூலை எழுதிய சாமி. சிதம்பரனார்தான், இந்த வள்ளலார் திரட்டுகளையும்

(4ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# மேட்டூரில் மகளிர் நாள் விழா – கலை நிகழ்வுகளுடன் கருத்தரங்கு

மேட்டூர் நகர கழகத்தின் சார்பில் 13.3.2018 மாலை 5.30 மணிக்கு மேட்டூர் சதுரங்காடியில் மகளிர் தின விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது.

ஓ. சுதா வரவேற்புரையாற்றினார். காஞ்சி மக்கள் மன்றத் தோழர்கள் பறை முழக்கத்தோடு பெரியார், அம்பேத்கர் பாடல்களும், சமூக இழிவு, சாதி ஒழிப்பு, பெண்ணுரிமைப் பாடல்களும் பாடினர். மு. கீதா தலைமையுரையாற்றினார். ‘சொத்து உரிமையில் பெண்கள்’ என்ற தலைப்பில் அனிதா, ‘விளம்பரத் துறையில் பெண்கள்’ என்ற தலைப்பில் ப.இனியா, ‘பெரியார் காண விரும்பிய விடுதலைப் பெண்’ என்ற தலைப்பில் கெ. ரூபா, ‘அலுவலகம் செல்லும் பெண்களின் நிலை’ என்ற தலைப்பில் இரண்யா உரையாற்றினர்.

தமிழ்நாடு அறிவியல் மன்ற அமைப்பாளர் சிவகாமி, அவரைத் தொடர்ந்து பேராசிரியர் சுந்தரவள்ளி சிறப்புரையாற்றினர். இந்திராணி நன்றி கூறினார். நிகழ்ச்சியை காயத்திரி, சரசுவதி தொகுத்து வழங்கினர். கூட்டத்திற்கு பல்வேறு பகுதிகளிலிருந்தும் பொது மக்களும் தோழர்களும் பெருமளவில் வந்திருந்து அறிவு விளக்கம் பெற்றனர்.

இந்நிகழ்வு பெண் தோழர்களால் நிதி வசூல் செய்து பெண்களாலேயே நடத்தப்பட்டது என்பது குறிப்பிடத் தக்கதாகும். இப்பொதுக் கூட்டத்திற்காக மேட்டூர் நகரம் முழுவதும் சுவரொட்டிகளும் முக்கியமான இடங்களில் பதாகைகளும் வைக்கப்பட்டிருந்தது.

விழா மேடைக்கருகில் நாகம்மையார், மணியம்மையார், குஞ்சிதம் குருசாமி, அஞ்சலை அம்மாள், சாவித்திரிபாய் புலே, மூவலூர் இராமாமிர்தம், இரோம் ஷர்மிளா, கௌரிலங்கேஷ், கிளாரா ஜெட்கிகன், அருந்ததிராய், செங்கொடி, கேப்டன் மாலதி ஆகியோரின் புகைப்படங்களுடன் அவர்களைப் பற்றிய குறிப்பும் அடங்கிய பதாகைகள் வைக்கப்பட்டிருந்தன.

இக்கூட்டம் பெண்கள் மத்தியில் விழிப்புணர்வும், எழுச்சியையும் ஏற்படுத்தியது.

# எச். ராஜாவின் திமிர்ப் பேச்சைக் கண்டித்து மேட்டூரில் ஆர்ப்பாட்டம்

பெரியார் சிலையை உடைக்கச் சொன்ன பாரதிய ஜனதா கட்சியின் தேசியச் செயலாளர் எச்.ராஜாவை குண்டர் சட்டத்தில் கைது செய்யக் கோரி 8.3.2018 அன்று மாலை 5 மணிக்கு மேட்டூர் பெரியார் பேருந்து நிலையத்தில் மேட்டூர் நகர கழக ஒருங்கிணைப்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

காவை இளவரசன் வரவேற்புரையாற்ற மாவட்டத் தலைவர் சூரியக்குமார் தலைமை தாங்கினார். சு.கிருட்டிணசாமி (தி.மு.க.), எஸ்.பி.ராஜா (நகர அவைத் தலைவர் தி.மு.க.), வைகோ முருகன் (நகர செயலாளர் ம.தி.மு.க.), பாலு, தினேசு (நகர பொறுப்பாளர் நாம் தமிழர் கட்சி), ராசு குமார் (மாநில கொள்கைப் பரப்புச் செயலாளர், திராவிடர் இயக்கத் தமிழர் பேரவை), சிவக்குமார் (மேட்டூர் சட்டமன்ற தொகுதிச் செயலாளர் வி.சி.க.), மெய்யழகன் (மாவட்டச் செயலாளர் வி.சி.க), கருப்பண்ணன் (மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி), அ. சக்திவேல் (கழக மாநில தலைமைச் செயற்குழு உறுப்பினர்), இ. கோவிந்தராசு (கழக மாவட்டச் செயலாளர்) ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

ஆர்ப்பாட்டத்திற்கு பல்வேறு பகுதிகளிலிருந்து கழகப் பொறுப்பாளர்கள், மகளிர் அணி தோழர்கள் பல்வேறு அமைப்பைச் சார்ந்த பொறுப்பாளர்கள் உட்பட 150க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

இறுதியாக எச்.ராஜாவின் உருவப் படம் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது. சுரேசுகுமார் (கழக நகர செயலாளர்) நன்றியுரையாற்ற நிகழ்வு முடிவு பெற்றது.

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொகுத்தார். இதற்கு மாறாக சைவத்தின் பெயரால் வைதிகத்தைப் பார்ப்பனியத்தைக் காப்பாற்ற வந்தவனே திருஞான சம்பந்தன். திருஞான சம்பந்தனின் வைதிக ‘பிராமணிய’ மோசடிகளை எடுத்துக் காட்டி இந்தத் தொடரை நிறைவு செய்வோம்!

**(அடுத்து இதழில் முடியும்)**

# ‘ஸ்டெர்லைட்’டை மக்கள் ஏன் எதிர்க்கிறார்கள்?

- குஜராத், கோவா, மாநிலங்களில் ஸ்டெர்லைட் ஆலை அமைக்க அனுமதி மறுக்கப்பட்டு மகாராஷ்டிரா மாநிலத்தில் அமைக்கப்பட்டு சுற்றுச் சூழலுக்கு பெரும் கேடு ஏற்பட்டதால் அங்குள்ள விவசாயிகள் ஆலையை அடித்து நொறுக்கியுள்ளனர். அதன் பிறகு மகாராஷ்ட்ரா மாநில அரசு ஆலைக்கான அனுமதியை ரத்து செய்துள்ளது.
- இயற்கை சமன்பாட்டில் முக்கியப் பங்காற்றும் அரிய வகை உயிரினங்களுக்கு தாயகமான மன்னார் வளைகுடாவில் 21 தீவுகள் அமைந்துள்ளன. அத்தகைய பாதுகாக்கப்பட்ட கடற் பகுதியிலிருந்து 25 கி.மீ தூரத்திற்கு வேதியியல் தொழிற்சாலைகள் அமைக்கக் கூடாது என்ற விதிகளை மீறி மன்னார் வளைகுடா உயிரியல் மண்டலத்திற்கு ஆபத்தை விளை விக்கும் வகையில் ஸ்டெர்லைட் ஆலை அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது.
- தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலை அமைப்பதற்கு ஆரம்பம் முதலே கடுமையான எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டு போராட்டங்கள் நடத்தப்பட்டன. தாமிரத் தாது கொண்டு வந்த கப்பலைமீனவர்கள் படகுகளில் சென்று விரட்டி அடித்தனர். தாமிரக் கழிவுகளை கடலில் கலப்பதை உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி தடுத்து நிறுத்தினர்
- ஸ்டெர்லைட் ஆலை அமைந்த போது அதனால் காற்று மண்டலத்தில் ஏற்படும் மாசு அளவுகளைக் கட்டுப் படுத்த 250 மீ சுற்றளவிற்கு பசுமை வளையம் (மரங்கள்) அமைக்க வேண்டும் என்கிற சட்டத்தை வளைத்து ஸ்டெர் லைட் நிறுவனத் திற்கு சாதகமாக தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் 10-இல் ஒரு மடங்கு 25 மீ பசுமை வளையம் அமைத்தால் போதும் என்ற சலுகையை கொடுத்தது. இதனையும் ஸ்டெர்லைட் நிறுவனம் செயல்படுத்த வில்லை.
- ஸ்டெர்லைட் நிறுவனம் விதி முறைகளை மீறிச் செயல்பட்டதற்காக இரு முறை ஆலை நீதிமன்றம் உத்தரவிட்டு மூடப்பட்டது.
- 2013ஆம் ஆண்டு மார்ச் 23ஆம் தேதி நச்சு வாயுக் கசிவு காரணமாக பலர் மயக்கமடைந்தனர். கண் எரிச்சல், தொண்டைவலி, மூச்சுத்திணறல் போன்ற பல்வேறு பாதிப்புக்களுக்குஉள்ளாகினர். இதன் காரணமாக ஸ்டெர்லைட் ஆலை சீல் வைக்கப்பட்டது. ஸ்டெர்லைட் ஆலையில் தாமிரத் தாது தயாரிக்கும் போது வெளியேறும் கழிவுகளைத் தேக்கி வைத்து மழைக்காலங்களில் திறந்து விட்டு நிலத்தையும், நீர்நிலைகளையும், கடலையும் மாசுப்படுத்தியுள்ளது.
- ஸ்டெர்லைட்டை சுற்றியுள்ள கிராமங்களில் நிலத்தடி நீரும், நிலமும், விவசாயமும் பாதிக்கப்பட்டுள்ளது. கால்நடைகள் நஞ்சு கலந்தநீரை குடித்து இறந்துள்ளன.
- கந்தக டை ஆக்ஸைடு காற்றில் கலந்து மாசு நிறைந்துள்ள நகரங்களில் இந்தியாவில் நான்காவது நகரமாக தூத்துக்குடி மாநகரம் உள்ளது. இதன்காரணமாக தூத்துக்குடியும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களும் வாழ்வதற்குத் தகுதியற்றதாக மாறி வருகின்றன.
- புற்று நோயால் பாதிக்கப்பட்டவர்கள் ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து வருகின்றனர். இந்நிலையில் ஸ்டெர்லைட் ஆலையை மேலும் நான்கு மடங்கு விரிவாக்கம் செய்வதற்கு மத்திய, மாநில அரசுகள் அனுமதி அளித்துள்ளது. இதற்கு பொது மக்களிடம் கடுமையான அதிருப்தியையும், கோபத்தையும் ஏற்படுத்தியுள்ளது. கடந்த 24ஆம் தேதி நடைபெற்ற கடையடைப்புப் போராட்டமும், 20 ஆயிரம் பேர் குடும்பத்துடன் பங்கேற்ற பொதுக் கூட்டமும், பொது மக்களின் எழுச்சி தமிழகத்தின் கவனத்தையும் ஈர்த்தது. கடந்த 50 நாட்களாக அ.குமரெட்டியாபுரம் கிராம மக்கள் தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். போராட்டத்திற்கு அனைத்து அரசியல் கட்சியினரும், பல்வேறு அமைப்புக்களும் ஆதரவு தெரிவித்துள்ளனர். ஆயினும்தமிழக அரசும், மத்திய அரசும், ஆலையை மூடுவதற்கும், அனுமதியை ரத்து செய்வதற்கும் மறுத்து வருகிறது.
- ஸ்டெர்லைட் ஆலை எதிர்ப்புப் போராட்டம் 50 நாட்களைக் கடந்து ஏ.குமரெட்டியாபுரம் மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். குமரெட்டியாபுரத்தைத் தொடர்ந்து பண்டாரப்பட்டியில் மக்கள் போராடி வருகின்றனர். இந்த நிலையில் பண்டாரப் பட்டியை அடுத்துள்ள சங்கரப் பேரி கிராமத்திலும் ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கிராம மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

# சிபிஎஸ்இ வினாத்தாள் முன்கூட்டி வெளியானதில் ‘ஏ.பி.வி.பி.’யினர் கைது

சி.பி.எஸ்.இ. பன்னிரண்டாம் வகுப்பு மற்றும் பத்தாம் வகுப்புத் தேர்வுக்கான வினாத்தாள்கள் முன்கூட்டியே வெளியானதைத் தொடர்ந்து 2 பாடங்களுக்கு மட்டும் மறுதேர்வு அறிவிக்கப்பட்டு உள்ளது.இந்நிலையில், மறுதேர்வுக்கு எதிரான போராட்டங்களை நடத்தி வரும் இப்பிரச்சனையில் உச்ச நீதிமன்றத்தையும் நாடியுள்ளனர். உச்சநீதிமன்றமும் மாணவர்களின் மனுவை விசாரணைக்கு ஏற்றுக் கொண்டுள்ளது.சி.பி.எஸ்.இ. பன்னிரண்டாம் வகுப்பு பொருளாதாரப் பாடத்திற்கும்,பத்தாம் வகுப்பு கணிதப்பாடத்திற்கும் முன்கூட்டியே வினாத் தாள்கள் வெளியாகின. இது பெரும்பரபரப்பை ஏற்படுத்திய நிலையில், இவ்விவ காரத்தில் ஆர்எஸ்எஸ் அமைப்பின் மாணவர் பிரிவான ‘ஏபிவிபி’யின் ஜார்க்கண்ட் மாநிலம் சத்ரா மாவட்டச் செயலாளரும், பயிற்சி நிலையம் நடத்தி வருபவருமான சதீஸ்குமார் பாண்டே, ஏபிவிபி-யின் மற்றொரு நிர்வாகியான பங்கத்சிங் என்பவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.இதனால் வினாத்தாள் வெளியான தற்கு மத்திய பாஜக அரசே முழுக்காரணம் என்பது உறுதியாகி இருக்கிறது. இந்நிலையில், மத்திய பாஜக அரசு, தங்களின் தவறை மறைத்து, மறுதேர்வு நடத்துவதன் மூலம் பிரச்சனையைச் சமாளிக்க முயற்சிக்கிறது. ஆனால், சிபிஎஸ்இ-யின் மறுதேர்வு முடிவுக்கு எதிராக மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். மத்திய அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர் வீட்டையும் முற்று கையிட முயன்று கைதாகினர்.இதனிடையே, மாணவர் ரோகன்மேத்யூ என்பவர், மறுதேர்வுக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். அவரின் இந்த மனுவை ஏற்றுக்கொண்டுள்ள உச்சநீதி மன்றம், புதன்கிழமை விசாரணை நடத்தப்படும் என்று அறிவித்துள்ளது.கேள்வித்தாள் வெளியான விவகாரத்தில் நீதிமன்றத்தின் மேற்பார்வையில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என அனைத்திந்திய பெற்றோர்கள் சங்கம் சார்பில்தாக்கல் செய்யப்பட்ட மற்றொரு மனுவை தில்லி உயர்நீதிமன்றம் ஏற்றுக் கொண்டுள்ளது.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 6th April 2018

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN